1979 மார்ச் 27]

மதுக்கரை அருகே நெடுஞ்சாலை.

*வினா எண். 554— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை கிராமத்தில் புதிதாக போடப்படும் தேசீய நெடுஞ்சாலைக்கு கையகப்படுத்தப்பட்ட நிலம் எவ்வளவு ஏக்கர் ?

(ஆ) அதற்கு நஷ்ட ஈடாக கொடுத்த தொகை விவரம் யாது ?

திரு. ப.கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): (அ) கோவை மாவட்டம், மதுக்கரை கிராமத்தில் புதிதாகப் போடப்படும் தேசீய நெடுஞ்சாலைக்கு இதுவரை 59.92 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) அதற்கு ஈடாக இதுவரை தொகை ரூ. 3,31,709.25 செலவிடப்பட்டுள்ளது. (மேற்படி தொகை, நிலம், கிணறு, கட்டிடங்கள், மரங்கள் மற்றும் இதனால் ஏற்பட்ட இதர இனங்களுக்கு அளிக்கப்படும் ஈடு எல்லாவற்றையும் உள்ளடங்கியது).

(திரு. துரை முத்துசாமி, திரு. நா. சுந்தரராஜ் ஆகியோர் நின்று கொண்டே இருக்கின்றனர். திரு. சி. ஆறுமுகம் உட்கார்ந்து கொண்டே பேசிக் கொண்டிருக்கிறார்.)

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுக்கரையில் 59.92 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது என்று அமைச்சர் அவர்களின் செயலர் தெரிவித்தார்கள். அந்த நிலையில் ஏற்கெனவே அரசு புறம்போக்கு நிலமாக இருந்த இடத்தை வாங்கி அதை மீண்டும் அரசுக்கு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருங்கள் நடராசன் மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் உட்கார்ந்து கொண்டே பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேசி முடிக்கட்டும்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர்......ஒரு கிளாரிபிகேஷன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே பாயிண்ட் ஆப் ஆர்டர், கிளாரிபிகேஷன் எதுவும் கிடையாது. நீங்கள் பேசிக் கொண்டே இருக்கக் கூடாது. திரு. நடராசன் தொடர்ந்து பேசும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

[1979 மார்ச் 27

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவர் அவர்களே..

திரு. நா. சுந்தரராஜ் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ பாயிண்ட் ஆப் ஆர்டர். எந்த விதியின் கீழ் அதை எழுதிக் கொடுக்க முடியுமோ அந்த விதியின் கீழ் அதை எழுதிக் கொடுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : தேவையில்லாத விவகாரங்களை உண்டாக்கப் பார்க்கிறீர்கள்.

திரு. ஆ. நடராசன் : தலைவர் அவர்களே, மதுக்கரை கிராமத்தில் புதிதாகப் போடப்படும் தேசிய நெடுஞ்சாலைக்கு கையகப்படுத்தப்பட்ட நிலம் இதுவரை 59.92 ஏக்கர் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிலம் அரசுப் புறம்போக்காக இருந்த நிலம். அதை தனியார் பட்டா பெற்று அரசாங்கத்திற்கு விற்று இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

திரு. ப. கோ. கிட்டு : (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நடராசன் அவர்கள் சொல்வதைப் பற்றிய குற்றச்சாட்டு அரசுக்கு வரவில்லை. அதைப் பற்றி அவர்கள் குறிப்பு எழுதி அனுப்புவார்களானால் அது பற்றி பரிசீலிக்கப்படும். மேற்படி சொல்லிய வேலைகளுக்கான பணத்தை 1979 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிவதற்குள்ளாக அவர்களுக்குக் கொடுக்கப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. நடராசன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இதே சட்டமன்றத்தில் நான் பேசுகிற போது இந்தப் புகார் பற்றி எடுத்துச் சொல்லி இருக்கிறேன். அதைப் போலவே கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் கொடுத்து இருக்கிறேன். எனவே அதைப் பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : அதைப் பரிசீலிக்கலாம்.

Coffee Plantation Corporation.

*Q. No. 555. THIRU S. GANESAN : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to start a coffee plantation corporation in the State; and

(*b*) if so, the details thereof?